## இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்

கொள்கைத் தலைப்பு : உள்வாரி மாணவர்களின் குறைதீர் கொள்கை

கொள்கை இலக்கம்:

மூதவை ஒப்புதல் திகதி:

ஆலோசனை சபை ஒப்புதல் திகதி:

செல்லுபடியாகும் திகதி

திருத்தப்பட்ட திகதிகள்

அனுமதித்தல் அங்கீகாரம்: ஆலோசனை சபை, இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்

**நிர்வாகப் பொறுப்பு** : துணைவேந்தர், பீடாதிபதி, சிரேஷ்ட மாணவ உளவளஆலோசகர், பிரதி சிரேஷ்ட மாணவ உளவளஆலோசகர், துறைத் தலைவர்கள், மாணவ உளவள ஆலோசகர்கள், மாணவர் வழிகாட்டிகள், பணிப்பாளர் / மாணவர்களின் நலன்புரி, சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அல்லது கல்வி மற்றும் மாணவர் சேவைகள் பிரிவு ஆகியோர் உள்வாரி மாணவர் குறைகளைத் தீர்க்கும் பொருட்டு இந்தக் கொள்கையைச் செயல்படுத்துவதற்குப் பொறுப்புடையவர்களாவர்.

---

### நோக்கம்:

மாணவர்கள் குறைகளைச் சமர்ப்பிப்பதற்காக நிறுவப்பட்ட மற்றும் நெறிப்படுத்தப்பட்ட பொறிமுறை பல்கலைக்கழகத்தில் இருப்பதை உறுதிசெய்வதோடு, மாணவர்களின் குறைகளை நேர்மையான, நியாயமான மற்றும் இரகசியமான முறையில் உடனடியாக விசாரித்துத் தீர்ப்பதற்கான கட்டமைப்பை வழங்குவதுமே இந்தக் கொள்கையின் நோக்கமாகும். இது மாணவர்களுக்கு உகந்த நிம்மதியான சூழலை உருவாக்குவதுடன், அவர்கள் கற்றலில் கவனம் செலுத்தவும் உதவும்.

பல்கலைக்கழகம், மாணவர்களின் குறைகளைக் கையாளுவதற்கு பல பொருத்தமான பொறிமுறைகளை கீழே பட்டியலிடப்பட்டுள்ளவாறு தற்போது ஏற்படுத்தியுள்ளது:

- பீட மட்டத்தினாலான வழிகாட்டிகளின் சேவை (பீடத்தின் கல்விப் பணியாளர்கள், ஒவ்வொரு மாணவருக்கும் தனித்தனியாக ஒதுக்கப்பட்டுள்ளனர்)
- பீட மட்டத்தினாலான மாணவ உளவளஆலோசகர்களின் சேவை (தொடர்புடைய கல்விப் பணியாளரால் விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தின் பேரில், துணைவேந்தரால் நியமிக்கப்பட்ட ஒவ்வொரு பீடத்தினதும் கல்விப் பணியாளர்கள்)
- பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட மாணவ உளவளஆலோசகரின் சேவை, (துணைவேந்தரால் நியமிக்கப்பட்ட சிரேஷ்ட கல்விப் பணியாளர்)

- பல்கலைக்கழகத்தின் பிரதி சிரேஷ்ட மாணவ உளவளஆலோசகரின் சேவைகள் (ஒவ்வொரு பீடத்திலுமிருந்து துணைவேந்தரால் நியமிக்கப்பட்ட சிரேஷ்ட கல்விப் பணியாளர்கள்)
- பல்கலைக்கழக விடுதிகளின் விடுதிப் பொறுப்பதிகாரிகள் மற்றும் பிரதி விடுதிப் பொறுப்பதிகாரிகளால் வழங்கப்படும் சேவைகள்
- பல்கலைக்கழக மாணவர்களின் நலன்புரி பணிப்பாளரால் வழங்கப்படும் சேவைகள்
- தொடர்புடைய சிரேஷ்ட உதவிப் பதிவாளரின் கீழ் பல்கலைக்கழகத்தின் கல்வி மற்றும் மாணவர் சேவைகள் பிரிவால் வழங்கப்படும் சேவைகள்
- பல்கலைக்கழகத்தின் தொழில் வழிகாட்டல் பிரிவினால் வழங்கப்படும் சேவைகள்
- சமூகவிஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடத்தின் உளவியல் ஆலோசனைப் பிரிவினால் வழங்கப்படும் சேவைகள் ('சித் அரண' உளவியல் ஆலோசனைப் பிரிவு)
- பாலின சமத்துவம் மற்றும் சமநிலைக்கான மையத்தினால் வழங்கப்படும் சேவைகள்

எவ்வாறாயினும், ஒரு மாணவர் தங்கள் குறைகளை சரியான வழிமுறையில் எளிதாக அனுப்புவதற்கு மேலே உள்ள அனைத்து வழிமுறைகளையும் நெறிப்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது. ஏனெனில், மாணவர்களின் குறைகளைக் கையாளும் சிறந்த செயல்முறையைக் கொண்டிருப்பது அவர்களது பிரச்சனைகளைக் கையாள்வதற்கும், அவற்றிட்குத் தீர்வு காண்பதற்கும் உதவும்.

**வாய்ப்பு:**

இந்தக் கொள்கை பல்கலைக்கழகத்தில் பதிவுசெய்யப்பட்ட உள்வாரி மாணவர்கள் அனைவருக்கும் பொருந்தும். பல்கலைக்கழகம் வழங்கும் அனைத்து உள்வாரி பட்டப்படிப்புகளுக்கும் இந்தக் கொள்கை பொருந்தும்.

**சட்டவாக்கச் சூழல்:**

இந்தக் கொள்கையானது 1978 ஆம் ஆண்டின் பல்கலைக்கழகச் சட்ட எண். 16, கல்வி நிறுவனங்களில் பகிடிவதை மற்றும் பிற வன்முறைகளைத் தடுக்கும் சட்டம், எண் 20, 1998, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இன் நிறுவனக் குறியீடு, 2012 ஆம் ஆண்டின் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பல்கலைக்கழக மாணவர் சாசனம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கைகள், உள்வாரி (பல்கலைக்கழகம்) சுற்றறிக்கைகள் மற்றும் சுற்றறிக்கை கடிதங்கள் ஆகியவற்றால் வலுவடைகின்றது.

**வரைவிலக்கணங்கள்**

a. பல்கலைக்கழகம்: இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் (SUSL)

b. பீடம்: பல்கலைக்கழகத்தின் எந்தொரு பீடமும்

c. துறை: பல்கலைக்கழகத்தின் எந்தொரு கல்வித் துறையும்

d. CQA -பல்கலைக்கழகத்தின் தரக்காப்பீட்டு நிலையம்

e. CCS - பல்கலைக்கழகத்தின் கணினிக் கற்கைகள் மையம்

f. ஆலோசனை சபை: பல்கலைக்கழக ஆலோசனை சபை

g. UGC - பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

h. பணியாளர்கள்: பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் நிரந்தரமான, நிரந்தரமற்ற, புறப் பணியாளர்கள் அனைவரும்

i. குறை - ஒரு மாணவர் தொடர்பான புகார்/முறையீடு, அதிருப்தி, கருத்து வேறுபாடு அல்லது தகராறுக்கான உண்மையான அல்லது உணரப்பட்ட தீர்வு கோரும் காரணமாக இருத்தல் வேண்டும். அத்தோடு, குறைகள் மாணவர்களின் கல்வி அல்லது பல்கலைக்கழகத்தில் உள்ள மாணவர் நலனுடன் நேரடியாக தொடர்புடையதாகவும் இருக்க வேண்டும்.

j. புகார்தாரர்: புகார்களைக் கொண்ட மாணவர்கள்

k. புகார்/மேல்முறையீடு - புகார்தாரரைப் பாதிக்கக்கூடிய வகையிலமையும் விசாரிக்கப்பட்ட முடிவு பற்றி புகார்தாரரால் எழுதப்படும் விண்ணப்பம் அல்லது மேல்முறையீடு.

l. புகார்தாரர் -குறையை முன்வைக்கும் மாணவர்/ மாணவருக்காக குறையை முன்வைக்கும் மாணவர் வழிகாட்டி(Mentee)

**கொள்கை அறிக்கை:**

பன்முகத்தன்மை கொண்ட, உள்ளடக்கம் உறுதி செய்யப்படுகின்ற, எந்த விதமான பாகுபாடுகளையும் கொண்டராத, வசதியான, வெளிப்படையான மற்றும் எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய பொறிமுறையுடன் கூடிய ஆரோக்கியமான மற்றும் மகிழ்ச்சியான கற்றல் சூழலை பல்கலைக்கழகம் எப்போதும் பெற்றுத்தரவேண்டுமென வலியுறுத்துவதுடன், உள்வாரி மாணவர்களின் கல்வி மற்றும்/ அல்லது தனிப்பட்ட பிரச்சனைகள் மாணவர் நல்வாழ்வுடன், நேரடியாக நியாயமான, ஒப்புரவான மற்றும் இரகசியமான முறையில் தீர்க்கப்படவேண்டும் எனவும் வலியுறுத்துகிறது. பல்கலைக்கழகம் உள்வாரி மாணவர் ஒவ்வொருவரினதும் குறைகளும் தீர்க்கப்படவேண்டிய முக்கியமான விடயமாகக் கருதுகிறது. ஆத்தோடு, குறைகளை உடனடியாகத் தீர்ப்பதில் கவனம் செலுத்துகிறது. குறை தீர்க்கும் செயல்முறையின் மூலம் கொடுக்கப்பட்ட தீர்வில் ஒரு மாணவர் அதிருப்தி அடைந்தால், உள்வாரி மாணவர்களின் மேல்முறையீட்டு உரிமையை பல்கலைக்கழகம் ஏற்றுக்கொள்கிறது.

**குறைகளை அறிந்துகொள்ளுதல் மற்றும் அவற்றிட்கான தீர்வுகளைப் பெற்றுத்தரும் பொறிமுறை**

ஊழியர்களின் குறைகளைத் தெரிந்துகொள்ளவும், நிவர்த்தி செய்யவும் பல்கலைக்கழகம் பலவிதமான முறைகளைக் கடைப்பிடிக்கிறது.

1. அவதானிப்பு, சாதாரண/முறைசாரா கலந்துரையாடல்கள் மற்றும் தீர்மானம் - மாணவர்கள் அனுபவிக்கும் சில குறைகள், வாய்மொழியாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ தொடர்புடைய பணியார்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்படுவதில்லை என்பது பொதுவான போக்கு. எனவே, மாணவர் வழிகாட்டிகள், மாணவர் உளவளஆலோசகர்கள், துறைத் தலைவர்கள், பிரிதி சிரேஷ்ட மாணவ உளவளஆலோசகர்கள் மற்றும் சிரேஷ்ட மாணவர் உளவளஆலோசகர்கள் மாணவர்களின் நடத்தைகள் குறித்தும் அவர்களால் வெளிப்படுத்தப்படாத குறைகள் காணப்படுகின்றனவா என்பது தொடர்பிலும் விழிப்புடன் இருக்க வேண்டும். இந்த வகையான குறைகளை நிர்வகிப்பதற்கு,

சம்பந்தப்பட்ட அனைத்து ஊழியர்களும் மாணவர்களின் நடத்தை விலகல்களை அவதானிக்கும் திறன் பெற்றவர்களாக இருக்க வேண்டும். ஏதேனும் நடத்தை விலகலைக் கண்டால், சம்பந்தப்பட்ட பணியாளர், முறைசாரா முறையில் அந்த குறையை மாணவருடன் கலந்துரையாடி, முடிந்தவரை உடனடியாகத் தீர்த்து வைக்க வேண்டும்.

2. இந்தக் கொள்கையானது மாணவர்களின் நடத்தையைக் கண்காணிக்கும் கல்வி ஊழியர்களின் திறனை வளர்ப்பதற்கான அவசியத்தை அடையாளம் காட்டுகிறது.

3. இக்கொள்கையானது துறை மட்டத்தில் மாணவர்களின் செயல்திறனைக் கண்காணிப்பதற்கான ஒரு அமைப்பை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை அடையாளம் காட்டுகிறது - மாணவர்களின் கல்வித் திறனைக் கண்காணிப்பதற்கான மாணவர் பகுப்பாய்வு பொறிமுறையானது ஒவ்வொரு துறைத் தலைவரின் கீழும் நிறுவப்பட்டு, தொடர்புடைய மாணவர் உளவளஆலோசகர்களால் கையாளப்படும். டிஜிட்டல் மயமாக்கப்பட்ட இந்த அமைப்பின் ஆரம்ப ஸ்தாபனத்திற்கு CCS உதவும். அதேளை ஒவ்வொரு துறையிலும் செயலாளரினால் இவ்வமைப்பு பராமரிக்கப்பட வேண்டும். இந்த அமைப்பு மாணவர்களின் செயல்திறனில் ஏதேனும் அசாதாரணத்தைக் கண்டறிய ஒவ்வொரு மாணவருக்கும் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட மதிப்பெண்களை படிப்படியாக கண்காணிக்க வேண்டும். அனைத்து மதிப்பெண்களும் பொதுவான வடிவத்தில் (அதாவது கூகுள் தாள், எக்செல் தாள்) டிஜிட்டல் மயமாக்கப்பட வேண்டும். அறிக்கை பொறிமுறையுடன் வடிவங்களை பகுப்பாய்வு செய்ய ஒரு தளம் ( Dash Board) உருவாக்கப்பட வேண்டும்.

4. குறை பற்றிய முறையான புகார் / மேல்முறையீடு - ஒரு தனிப்பட்ட புகார்தாரராக புகார்களை அனுப்பி அவற்றைத் தீர்ப்பதற்கான முறையான வழிமுறையாகும். முறையான புகார்/ மேல்முறையீடு இரகசியதன்மையுடன் கூடிய ஆவணமாகவோ அல்லது கடவுச்சொல்லால் பாதுகாக்கப்பட்ட இணைப்பாக பீடாதிபதி /பிரதி சிரேஷ்ட மாணவர் உளவளஆலோசகருக்கு மின்னஞ்சல் ஊடாக அனுப்பி வைக்கவேண்டும். இதை புகார்தாரரும் வழிகாட்டியும் ஒன்றாகவோ அல்லது தனித்தனியாகவோ அல்லது மற்ற தரப்பினருக்கு தெரிவிக்காமல் ஒரு தரப்பினரோ சமர்ப்பிக்கலாம்.

5. திறந்த கதவு முறை - உள்வாரி மாணவரொருவர் தனது குறைகளை வழிகாட்டி(கள்), மாணவ உளவளஆலோசகர்(கள்), துறைத் தலைவர், பிரதி சிரேஷ்ட மாணவ உளவளஆலோசகர் அல்லது சிரேஷ்ட மாணவ உளவளஆலோசகர் மூலம் அனுப்பாமல் நேரடியாக பீடாதிபதி, பணிப்பாளர்/மாணவர் நலன்புரி அல்லது பல்கலைக்கழக துணைவேந்தருக்கு அனுப்பலாம். இருப்பினும் உயர்மட்ட நிர்வாகத்தின் முன் நியமனத்துடன் அவ்வாறு செய்தல் வேண்டும்.

6. பீட சபைக்கூட்டம் - பீடத்தின் மாணவர் பிரதிநிதிகள் ஒவ்வொரு பீடத்தின் சபைக்கூட்டத்திலும் அவர்களின் கூட்டுக் கல்வி விடயங்கள்/குறைகளை வெளிக்கொண்டு வர வாய்ப்பு அளிக்கப்படுகிறது. மாணவர்களின் கல்விக் குறைகளை பீடசபை நிவர்த்தி செய்யும்.

7. மாணவர் நலன்புரி கூட்டம் - நலன் சார்ந்த கூட்டுக் குறைகளை நிவர்த்தி செய்ய பீடங்களின் அளவிலான மாணவர் நலன்புரிக் கூட்டங்கள்

முன்னெடுக்கப்படும். இந்தக் கூட்டத்தை பீடத்தின் பீடாதிபதி, துறைத்தலைவர் மற்றும் உதவிப் பதிவாளர் (AR) மற்றும் மாணவர் பிரதிநிதிகள் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர்.

8. மாணவர் திருப்தி கணக்கெடுப்பு - சாத்தியமான குறைகளை கண்டறிந்து மகிழ்ச்சியான கற்றல் சூழலை உருவாக்கும் நோக்கில் ஆண்டுதோறும் மாணவர் திருப்தி கணக்கெடுப்பு நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

9. மாணவர் குறை தீர்க்கும் குழு- முறையான புகார்களை வழக்குகள் - வழக்குளாக என்ற அடிப்படையில் தெரிவிக்கப்படும் குறைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு தொடர்புடைய பீடத்தின் பீடாதிபதியால் நியமிக்கப்படும் குழு.

10. மாணவர் குறைகேட்பு மேல்முறையீட்டுக் குழு - மேலே குறிப்பிட்டுள்ள முறையான புகார்த் தீர்மானத்தில் குறைகூறுபவர்/புகார்தாரர் திருப்தி அடையாதபோது, குறைகளைக் கேட்டுத் தீர்ப்பதற்காகப் பல்கலைக்கழகத்தின் பணிப்பாளர்/மாணவர் நலன்புரி மூலம் நியமிக்கப்படும் குழு.

11. உண்மையான குறைகளைப் புகாரளிக்க இயங்கலை அமைப்பின் வளர்ச்சியின் அவசியத்தையும் இந்தக் கொள்கை அடையாளம் காட்டுகிறது, அது சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் இரகசியமாகப் பெறப்பட்டு, அதே செயல்பாட்டு நடைமுறையின் மூலம் கையாளப்பட வேண்டும்.

12. இரகசியத்தன்மை மற்றும் தகவல் மேலாண்மை - மாணவர்களின் குறைகளை ஒப்படைக்கும் பொறிமுறையானது நன்கு செயல்படுத்தப்பட்ட ஒரு முறையுடன் இணைக்கப்படுவது மிகவும் முக்கியமானது. ஒவ்வொரு புகாரினதும் அடைவுமட்டம் தெளிவாக ஆவணப்படுத்தப்பட்டு பிரதி உளவளமாணவ ஆலோசகரால் பீடாதிபதி அலுவலகத்தில் கையளிக்கப்பட வேண்டும்.

**நடைமுறைபடுத்தல்**

தயவுசெய்து SOP No: CQA/SOP/stu sup/2021/01 ஐ உசாவவும்

**துணை ஆவணங்கள்**

1978 ஆம் ஆண்டின் பல்கலைக்கழகங்கள் சட்டம் எண். 16

கல்வி நிறுவனங்களில் பகிடிவதை மற்றும் பிற வன்முறைகளை தடை செய்தல் சட்டம், 1998 எண் 20

மனித உரிமை நடைமுறைக் குறியீடு

2012 ஆண்டின் ப.மா.ஆ (UGC) பல்கலைக்கழக மாணவர் சாசனம்

சமத்துவம் மற்றும் வேற்றுமை இல்லாக் கொள்கை - இ.ச.ப (SUSL), 30.10.2021 இல் நடைபெற்ற 253ஆவது மூதவை மற்றும் 276 ஆவது ஆலோசனை சபையால் அங்கீகரிக்கப்பட்டது.

மாணவர் வழிகாட்டுதல் கொள்கை - இ.ச.ப (SUSL) இன் உள்ளக தரக்காப்பீட்டுக் கொள்கை ஆவணம், 31.12.2019 இல் நடைபெற்ற 236 ஆவது மூதவையிலும், 24.02.2020 இல் நடைபெற்ற 257ஆவது ஆலோசனை சபையிலும் அங்கீகரிக்கப்பட்டது.

உளவியல் ஆலோசனை சேவைகளுக்கான கொள்கை மற்றும் மாணவர்களுக்கான அழுத்தமான சூழ்நிலைகளைக் கையாளுதல் - இ.ச.ப (SUSL) இன் உள்வாரி தரக்காப்பீட்டு உறுதி கொள்கை ஆவணம், 31.12.2019 இல் நடைபெற்ற 236ஆவது மூதவை மற்றும் 24.02.2020 இல் நடைபெற்ற 257ஆவது ஆலோசனை சபையில் அங்கீகரிக்கப்பட்டது.

பாலின சமனிலை மற்றும் சமத்துவத்திற்கான கொள்கை - இ.ச.ப (SUSL_

மாணவர் குறைகளைக் கையாளுதல் மற்றும் தீர்த்தல் குறித்த பீடக் கொள்கை, பிரயோக விஞ்ஞானங்கள் பீடம், அக்டோபர், 2021

**பிரகடனம்:**

(i) உள்வாரி மாணவர்களாக பல்கலைக்கழகத்தில் பதிவு செய்யும் போது இந்தக் கொள்கையானது அச்சிடப்பட்ட ஆவணமாக விநியோகிக்கப்படவேண்டும். பல்கலைக்கழக /பீட திசைமுகப்படுத்தல் நிகழ்ச்சி திட்டத்தின் போது புதிய மாணவர்களுக்குக் கொள்கை குறித்துக் கற்பிக்கப்படும்.

(ii) இந்தக் கொள்கை அச்சிடப்பட்ட ஆவணமாக பீடத்தின் கல்விப் பணியாளர்களின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படும்

(iii) இந்தக் கொள்கை பல்கலைக்கழக /பீட இணையதளத்தில் 'மாணவர் உதவி' என்ற தாவலின் கீழ் தோன்றும்

(iv) பல்கலைக்கழக இணையதளத்தின் தரக்காப்பீட்டு நிலையத்தின் (CQA) இணையப் பக்கத்தின் 'பதிவிறக்கங்கள்' என்ற இணைப்பு மூலம் இந்தக் கொள்கை கிடைக்கும்.

இந்தக் கொள்கையானது, இ.ச.ப (SUSL) (32ஆவது SSC-QA கூட்டம், ஆகஸ்ட் 2021 இல் நடைபெற்ற) பல்கலைக்கழகத்தின் தரக்காப்பீட்டு நிலையத்தின் பொருட்டு, மூதவை குழு பரிந்துரைத்த குழுவால் தயாரிக்கப்பட்டது. 14.09.2021 இல் நடைபெற்ற அதன் 255ஆவது கூட்டத்தில் இக்குழுவிற்கு மூதவையால் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

*குழு அமைப்பு*

*கலாநிதி. எம். சந்துன் ஜே. பெரேரா (தலைவர்)*
*பேராசிரியர் எச்.ஏ.டி. ருவன்தீபிகா (உறுப்பினர்)*
*திருமதி. பி. கயானி இமந்திகா டயஸ் (செயலாளர்)*
*கலாநிதி. எச்.பி. ரசிக பிரியங்கர (உறுப்பினர்)*
*திரு. சமன் உயங்கொட (உறுப்பினர்)*

***** குறிப்புகள்:***

***இந்தக் கொள்கையின் ஆரம்பப் பதிப்பானது, பிரயோக விஞ்ஞான பீடத்தின் மாணவர்களின் குறைகளைக் கையாளுதல் மற்றும் தீர்க்கும் பொறிமுறையாக கலாநிதி எம். சந்துன் ஜே. பெரேராவினால் பீடத்தின் கல்விப் பணியாளர்களின் ஆலோசனையுடன் உருவாக்கப்பட்டது.***